செ. கு. எண்: 279 நாள் :17.10.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 17.10.2013**

பிரபல சமூக சேவகியும், தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் மகளுமான திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி தனது 92 வது அகவையில் இன்று (17.10.2013) இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்திய மகளிர் சங்கத்தின் (WIA) தலைவராகவும், மயிலாப்பூர் அகடமியின் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள். 35 ஆண்டுகளுக்கு மேல் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினராக இருந்த திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள், அதன் தலைவர் பதவியையும் சிறிது காலம் வகித்துள்ளார். கர்நாடக சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சென்னை நகர ஷெரீப் ஆக பணியாற்றியவர். வயதான காலத்திலும் சமூக சேவை ஒன்றையே முழுமூச்சாகக் கொண்டு செயல்பட்டவர். மத்திய அரசின் பத்மஸ்ரீ மற்றும் பத்ம பூஷண் விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

அனைவரிடத்திலும் எளிமையாகவும், இனிமையாகவும் பழகக்கூடிய திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாதது.

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9